# DM COURT, SANKARANKOVIL

## தேதி 27.01.2026

## அசல் வழக்கு எண். 232/2018

**பி.வா.சா.1 (வெள்ளப்பாண்டி) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு தபசில் சொத்துக்களின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தபசில் சொத்துக்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்ணில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளதா என்பது பற்றி என்னால் கூற இயலாது என்றால் சரிதான். வாதிகளின் சொத்துக்கு எந்த பக்கத்தில் எனது சொத்து உள்ளது என்றால் கீழ்ப்பக்கத்தில் உள்ளது. மேற்படி கீழ்பக்க சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனது தாயார் எனக்கு செட்டில்மெண்ட் கொடுத்த சொத்து அது.

2. எனது தாயார் எனக்கு எப்போது செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் 2010ம் வருடம் எழுதிகொடுத்தார். 2010ம் வருடம் பிறப்பித்துக் கொடுக்கப்பட்டதாக நான் சொல்லும் செட்டில்மெண்ட் ஆவணம் ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எந்த சர்வே எண்ணில் உள்ள இடம் பொறுத்து பிறப்பிக்கப்பட்டது என்றால் சர்வே எண்.933 ல் 5E இடத்திற்காக பிறப்பிக்கப்பட்டது.

3. மேற்படி செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்தை எனது தாயார் யாரிடமிருந்து கிரையம் பெற்றார்கள் என்றால் முப்பிடாதி என்ற நபரிடமிருந்து 1991ம் வருடம் கிரையம் பெற்றார். வழக்கு தபசில் சொத்துக்கள் மற்றும் அதற்குகீழ்பக்கம் உள்ள என்னுடைய சொத்து ஆகியவை ஆதியில் முப்பிடாதிக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி முப்பிடாதியிடமிருந்து 1984ம் வருடம் வாதிகளின் தாயார் வேலம்மாள் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேலம்மாள் வாதிகளின் தாயார் என்றால் சரிதான். வேலம்மாள் இறந்ததற்கு பிறகு அவருடைய சொத்துக்களை வாதிகள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை வாதிகள் எவ்வளவு காலமாக

அனுபவித்து வருகிறார்கள் என்றால் எவ்வளவு காலம் என்று என்னால் குறிப்பிட்டு கூறஇயலாது.

4. வேலம்மாள் கிரையம் பெற்ற சொத்தில் வாதிகள் எந்த பக்கத்தில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் வடக்கு பக்கத்தில் வீடு கட்டியுள்ளார்கள். எனது தாயார் எவ்வளவு விஸ்தீரணம் உடைய சொத்தை கிரையம் பெற்றார் என்றால் 6 சென்ட் இடத்தை கிரையம் பெற்றார். மேற்படி 6 சென்ட் இடத்தில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் அந்த இடத்தின் வடபாதியில் வீடு கட்டியுள்ளேன். மேற்படி 6 சென்ட்இடத்தில் மாட்டுத்தொழுவம் எங்கு அமைக்கப்பட்டுள்ளது என்றால் எங்களது வீட்டிற்கு முன்பு அமைக்கப்பட்டுள்ளது. அந்த மாட்டுத்தொழுவம் எப்போது அமைக்கப்பட்டது என்றால் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டது. அந்த மாட்டுத்தொழுவம் கட்டடப்பட்ட பிறகுதான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு எவ்வளவு காலத்திற்கு முன்பு மாட்டுத்தொழுவம் கட்டடப்பட்டது என்றால் சுமார் 2-3 மாதங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டது. அந்த மாட்டுத்தொழுவத்தை நான் அமைக்கும்போது வாதிகள் அந்த இடம் தங்களுக்கு பாத்தியப்பட்டது என கூறி தடுத்தார்களா என்றால் இல்லை. அந்த மாட்டுத்தொழுவத்தை நான் அமைக்கும்போது வாதிகள் அந்த இடம் தங்களுக்கு பாத்தியப்பட்டது என கூறி தடுத்தார்கள் என்றால் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களை வழக்கறிஞருக்கு நான்தான் சொன்னேன். மேற்படி எதிர்வழக்குரையில் எனக்கு பாத்தியப்பட்டதாக நான் சொல்லும் சொத்து எவ்வகையில் எனக்கு பாத்தியப்பட்டது என்ற விபரங்களை கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 1991ம் வருடம் எனது தாயார் பெற்ற கிரைய ஆவணம் மற்றும் 2010ம் வருடம் எனது பெயரில் பிறப்பிக்கப்பட்டதாக சொல்லப்படும் செட்டில்மெண்ட் ஆவணம் ஆகிவற்றை எனது வழக்கறிஞரிடம் நான் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். மேற்படி 1991ம் வருட கிரைய ஆவணம் மற்றும் 2010ம் வருட செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் என் கைவசம் உள்ளதா என்றால் அந்த அசல் ஆவணங்கள் லோனுக்காக கொடுக்கப்பட்டுவிட்டன.

6. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் நிரூபண உறுதிக்கூற்றில் எனது தாயார் பெற்ற கிரைய ஆவணம் மற்றும் எனது பெயரில் பிறப்பித்துக் கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் ஆகியவற்றை பற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. பிராது தபசில் சொத்துக்களுள் கீழ்பக்க சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை எனது எதிர்வழக்குரை மற்றும் நிரூபண உறுதிக்கூற்றில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எவ்வளவு விஸ்தீரணம் உடைய இடம் எனக்கு பாத்தியப்பட்டு எனது அனுபவத்தில் உள்ளது என்று எனது எதிர்வழக்குரை மற்றும் நிரூபண உறுதிக்கூற்றில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்டதாக நான் சொல்லும் சொத்திற்கான பட்டா என் பெயரிலோ, எனது தாயார் பெயரிலோ வழங்கப்பட்டதா என்றால் எனது தாயார் பெயரில் வழங்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. என் பெயரில் பட்டா வழங்கப்படவில்லை. எனது பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றாலும், அந்த பட்டா எனது தரப்பு வழக்கிற்கு பாதகமானது என்பதால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

7. பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 தீர்வை ரசீதுகள் எனது வீட்டை பொறுத்து கட்டப்பட்ட ரசீதுகள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.1 தீர்வை ரசீதுகள் எனது இட மொத்தத்திற்கும் கட்டப்பட்ட ரசீதுகள். எனது வீட்டிற்கு முன்பு உள்ளதாக சொல்லும் மாட்டுத்தொழுவத்திற்கு தனி கதவு எண் உள்ளதா என்றால் இல்லை. அதற்கு தனி வரிவிதிப்பு உள்ளதா என்றால் இல்லை. அந்த தொழுவத்திற்கும் வீட்டிற்கும் சேர்த்து ஒரே வரிவிதிப்பு உள்ளது. பி.வா.சா.ஆ.3 மின்கட்டண ரசீதுகள் எனது இடத்தில் வடபக்கத்தில் உள்ள வீட்டிற்கான மின்இணைப்புக்கு கட்டப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 மின்கட்டண ரசீதுகள் கட்டப்பட்டதற்கான மேற்படி வீட்டை பொறுத்து எனக்கும், வாதிகளுக்கும் இடையில் பிரச்சனை இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 ஆவணங்கள் வழக்கை தீர்மானிப்பதற்கு தேவையான ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. பிராது 1ம் தபசில் சொத்து ஆதியில் முப்பிடாதி என்பவருக்கு பாத்தியப்பட்டு அவரிடமிருந்து வாதிகளின் தாயார் வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரையம் பெற்று தற்போதுவரை வாதிகளின் அனுபவத்தில் அந்த சொத்து இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

8. வாதிகளின் தந்தையார் பெயர் ஆதினமிளகி என்றால் சரிதான்,. பிராது தபசில் சொத்துக்களின் பட்டா ஆதினமிளகி பெயரில் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதிகளின் பெற்றோர்கள் வாதிகளை தங்கள் வாரிசுகளாக விட்டுவிட்டு சுமார் 30 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்கள் என்றால் இருக்கலாம். பிராது தபசில் சொத்துக்களை நான் அத்துமீறி அபகரித்து கட்டிடம் கட்டியுள்ளேனா என்ற விபரம் அந்த சொத்துக்களை அளந்து பார்த்தால் தெரியவரும் என்றால் நான் அபகரிக்கவில்லை. அந்த சொத்துக்களை அளப்பதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. அந்த சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் மூலம் தற்போது அளப்பதற்கு ஆட்சேபனை எனக்கு உள்ளதா என்றால் இல்லை. பிராது தபசில் சொத்துக்களை 2018 ம் வருடம் நான் அத்துமீறி ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டினேன் என்றாலும், அதனால் வாதிகள் எனக்கு எதிராக வலியுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றாலும், வாதிகள் வழக்குரையில் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் சரியல்ல. வாதிகள் அவர்களது இடத்தில் காம்பவுண்ட் சுவர் கட்டியபிறகுதான் நான் எனது இடத்தில் மாட்டுத்தொழுவம் அமைத்தேன். நான் அவர்களது இடத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை.

**மறுவிசாரணை இல்லை.**